# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி   மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
## அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி


சித்திரை மாத வெளியீடு (April-May 2013)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114


# வடலூர் வள்ளலார் பற்றிய சித்தர் கருவூறாரின் ஆய்வுரைகள்

காணிக்கை ரூ.4/-



வடலூர் இராமலிங்க
அடிகளார்

# உள்ளுறை

*இந்த இதழில் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் வடலூர் இராமலிங்க அடிகளார் பற்றி ஆய்வு செய்து தமது பொதுமேடைப் பேச்சுக்களில் வெளிப்படுத்திய கருத்துக்களை வழங்குகின்றோம்.*

**1. சென்னை செம்பியம் திரு வி.க.நகரில் உள்ள ஒரு வள்ளலார் பசனை மடத்தில் ஆற்றிய உரையின் பகுதி.**

**2. வடலூர் சன்மார்க்க சங்கத்தினர் இராமகிருட்டிண மடம் போல் உலகளாவிச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு பொதுமேடையில் ஆற்றிய உரை.**

**3. இராமலிங்க அடிகளார் வாழ்வியல் நிலைகளை ஆய்வு செய்து நிகழ்த்திய உரை.**

**4. இராமலிங்க அடிகளார் சிவபெருமானைக் கண்ட நிகழ்ச்சி பற்றிய ஆய்வு.**

# வள்ளலார் உரை-1

இராமலிங்கம் பிள்ளை எழுதுகிறார்; 'எழுதிக் கொடுத்த அப்பாவும் கைவிட்டார்', என்று கூறி வருத்தப்பட்டு எழுதுகிறார். அத்தனைக்கும் ஐயா அவர்கள் தன் வாயால் தொழுவூர் வேலாயுதம் பிள்ளையை அப்பா என்று கூப்பிடுவார்; அப்பொழுது தொழுவூர் வேலாயுதம் பிள்ளை கூட வள்ளலாரைப் புரிந்து கொள்ளவில்லை. மனம் நொந்துதான் 'கடை விரித்தோம் கொள்வாரில்லை' என்று அவர் சொன்னதற்குக் காரணம்; அவரிடம் வந்த அத்தனைப் பேருமே ஏறத்தாழ அவரைப் புரிந்து கொள்ள வில்லை. இன்றைக்கு இருக்கின்ற ஆட்கள் போலவே, ஏறத்தாழ யாருமே அவரைப் புரிந்து கொள்ளவில்லை; ஏறத்தாழ என்றால் நான் எல்லோருமே புரிந்து கொள்ளவில்லை என்று சொல்லவில்லை,

***திரு அருட்பாவை யாரும் உணராமல் போனது ஏன்?***

அவர் வாழ்ந்த காலத்திலே மனம் நொந்து,நொந்து, சிந்தை வெந்து வெந்து, நைந்துநைந்து குருதிக் கண்ணீர் வடித்து விட்டுப் போனவர்தான் இராமலிங்கம் பிள்ளை. அது ஒரு பெரிய சோக வரலாறு, சொல்லமுடியாத வேதனை வரலாறு. அதைத் தெரிந்தவர்களால்தான் அருட்பாவை பாடி உணர முடியும்.

***நினைந்துநினைந்து உணர்ந்துஉணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே***
***நிறைந்துநிறைந்து ஊற்றெழும் கண்ணீர்அதனால் உடம்பு***
***நனைந்துநனைந்து, அருளமுதே, நன்னிதியே, ஞான***
***நடத்தரசே என்உரிமை நாயகனே என்று***
***வனைந்துவனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்***
***மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்***
***புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்லுகின்றேன்***
***பொற்சபையில், சிற்சபையில் புகும் தருணம் இதுவே.***

எவ்வளவு அன்பும் அருளும் இரக்கமும் இருந்தால் சத்தியம் சொல்லுகிறேன் என்று சொல்லுவார். சத்தியம் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு ஏன் வந்தது!? உன்னைக் கூப்பிடுவதற்குச் சத்தியம்

செய்கிருர். சத்தியம் சொல்லுகிறேன், சத்தியம் சொல்லுகிறேன் என்று, ஆணையிட்டுக் கூப்பிடுகிருர். ஒருவரும் வரவில்லை! அப்பொழுது இந்த நாடு உருப் பெறுமா?

இராமலிங்க வள்ளலார் அவர்கள் மனம் நொந்தார், வெந்தார், குருதிக் கண்ணீர் வடித்தார், வேதனைப்பட்டார் என்ருல்; நான் அதுபோல் வேதனைப் படுவதில்லை.

36 ஆண்டுகள் காடுகள், மேடுகளிலே திரிந்தவர் யாம்! M.A., Ph.D. வரை படித்தவர். 4000 ரூபாய் இன்றைய நிலையில் சம்பளம் வாங்குகின்றேன். இருந்தாலும் வீட்டில் மனைவி மக்களையெல்லாம் விட்டுவிட்டு, ஒரு வாரத்திற்கு இரண்டு தடவை, மூன்று தடவை தமிழகம் முழுவதும் மின்னல் வேகமாகச் சுற்றுப்பயணம் செய்கின்றேன். எதற்காகச் சுற்றுகின்றேன்?

***குருதேவரின் செயல் நிலை விளக்கம்***

நான் வீட்டில் வசதியாக வாழலாம், போகின்ற இடத்தில் சாப்பாடு கிடைக்குமோ!? என்னவோ!? இல்லையோ!? இரவுபகலாக எங்கெங்கோ பூசை, சுடுகாட்டிலே பூசை, இடுகாட்டிலே பூசை, அங்கே யாகம், யக்ஞம், வேள்வி. எங்கெங்கேயோ போய்க் கொண்டிருக்கிறேன். யார்யார் வீட்டிலேயோ ஏந்தரீகத் தகடு, மாந்தரீகத் தகடு, யார் யார்க்கோ பேய், பிசாசு பிடித்திருக்கிறது, யார் யார் வீட்டிலேயோ பில்லி, சூனியம் இருக்கின்றது. போய் எடுத்து நலம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன், எதற்காக!? எனக்கு என்ன வந்தது அவசியம்!?

இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்! இவ்வளவு ஆற்றல் என் கையில் இருக்கின்றது போல் உன் கையிலும் இருக்கின்றது!, உன் மனைவி மக்களை நலமாக்கித் தருகின்றேன்!? இனியாவது இந்துமதத்தை நம்பு, கும்பிடு. சாமியை, கடவுளை இல்லை என்று சொல்லாதே! கடவுள் இருக்கிறது என்பதற்கு இதைச் செய்து காட்டுகிறேன். சித்தர்களால்தான் முடியும்.

மாய வித்தை, செப்பிடு வித்தை, சித்து விளையாட்டைச் செய்பவர்கள் அல்ல சித்தர்கள்! சித்துக்கள் அனைத்தையுமே தனித்தனியே கடந்தவர்களுக்குப் பேர்தான் சித்தர்கள். இன்றைக்கு நாட்டில் எவன் சித்து விளையாடுருனே? அவன் எல்லாம் சித்தர் என்று பெயர்

வைத்துக் கொள்கின்றான். தமிழ் தெரியாத கூட்டம் கருப்பு ஆடை வெள்ளாடு என்கின்றது மாதிரி, சித்து விளையாடுகிறவர் எல்லாம் சித்தர் என்று சொல்கிறான்.

சித்துக்களைக் கடந்தவர்கள்தான் நாங்கள். அத்தனைக் கலைகளையும் முறையாகக் கடந்தவர்கள். உனக்கு மந்தரம் வேண்டுமா? மந்திரம் வேண்டுமா? மாந்தரம் வேண்டுமா? மாந்தரீகம் வேண்டுமா? தந்தரம் வேண்டுமா? தாந்தரம் வேண்டுமா? தாந்தரீகம் வேண்டுமா? தந்திறம் வேண்டுமா? எந்தரம் வேண்டுமா? எந்திரம் வேண்டுமா? ஏந்தரம் வேண்டுமா? ஏந்தரீகம் வேண்டுமா? ஞானமா? தவமா? பூசையா? ஓமமா? ஓகமா? யாகமா? யக்ஞமா? வேள்வியா? தவமா?... இப்படி 64 முறைகள் இருக்கின்றன. அதெல்லாம் கற்றுக்கொண்டு போகின்றாயா?! சக்கரங்கள்; 243 சக்கரம் எழுதலாம், 108 சக்கரம் எழுதலாம், 1008 சக்கரம் எழுதலாம். நான் சொல்லித் தருகின்றேன், எழுதிப் பார், அதைப் பரீட்சை செய்து பார். நான் செய்தால்தான் பலிக்கும் என்று சொல்பவன் அல்ல! நீ செய்தால் கூடப் பலிக்கும் என்று சொல்லக் கூடியவன் நான்.

***சித்தர்கள் யார் என்ற தெளிவான விளக்கம்.***

சித்தர்கள் ஞானம், அக ஞானம், புறஞானம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் என்று ஐந்து ஞானங்களைச் சொல்லுகிற பரம்பரை.

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் ஒருவன்' என்று சொல்கிறார் ஐயா! அந்தத் திருக்கூட்ட மரபுகளுக்கெல்லாம் தலைவர்கள், வழிகாட்டுபவர்கள் நாங்கள் பீடாதிபதிகள்; கடவுளைக் கையைப் பிடித்துப் பார்த்து அதற்கு நாடி இருக்கின்றதா என்று சொல்லக் கூடியவர்கள் நாங்கள்! கோயிலைப் பார்த்ததும், வாசலை மிதித்ததும், இந்தக் கோயிலில் சாமி இருக்கிறதா? இல்லையான்னு சொல்லக் கூடியவர்கள் நாங்கள்! மனிதரைப் பார்த்ததும் எப்பொழுது செத்துப் போவான்? எப்பொழுது பிழைப்பான் என்று சொல்லக் கூடியவர்கள் நாங்கள்! இவன் அருளாளனா? மருளாளனா என்று சொல்லக் கூடியவர்கள் நாங்கள்! அந்த ஆற்றலைப் படைத்தவர்கள், இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் நாங்கள். இன்றைக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை இந்த நாட்டில். நான் ஒருவரையும் நம்பவில்லை.

பல ஆயிரக்கணக்கான பேர்களை உருவாக்கி, ஊர் ஊராகப் போய்க் கொண்டிருக்கிறேன், போய்ச் சொல்கிறேன்.

பத்துப் பதினைந்து நோட்டீசு அடித்துக் கொடுத்து இருக்கிறேன். ஒரு 200 புத்தகம் போட்டு இருக்கிறேன். மாதத்தில் நான்கு சொற்பொழிவு, ஐந்து சொற்பொழிவு பேசுகின்றேன். ஆயிரக்கணக்கான பேருக்கு பேய், பிசாசு ஓட்டிக்கொண்டு இருக்கின்றேன். பில்லி, சூனியத்தை எடுத்து கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன். நூற்றுக்கணக்கான தாயத்து கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன். கோயிலுக்கு மந்திரித்துக் கொண்டு இருக்கின்றேன். ஆயிரம், பல்லாயிரக் கணக்கான ரூபாய் வருகிறது, பல்லாயிரக்கணக்கான ரூபாய் போகின்றது. ஒரு பெரிய Establishment வைத்துக் கொண்டு இருக்கின்றேன்.

இருந்தும் என்னாலேயே நாட்டில் ஒன்றும் செய்ய முடியவில்லை! இராமலிங்க அடிகளார் வந்து என்ன செய்ய முடியும்!? ஐயா வந்து ஒரு பேயைக் கூட ஓட்ட மாட்டார்! கையைக் காட்டிவிட்டுப் போவார்! அவரால் முடியுமா? அவர் பேச்சைக் கேட்பானா? அமைதியே வடிவானவர்! நான் கையிலே திரிசூலத்தைப் பிடித்து ஆர்ப்பரித்து வெறியாட்டம் ஆடி விடுவேன். அவர் அப்படி இல்லை! நான் கையிலேயே திரிசூலம் வைத்திருக்கின்ற ஆள்! என்னைப் பார்த்தாலே பயப்படுகிற மாதிரி ஆள் நான்! ஐயாவைப் பார்க்கும் போது அன்பே வடிவானவர். யாரும் அவரைப் பார்த்துப் பயப்பட வில்லை.

***இராமலிங்க அடிகளார் தோற்றதன் காரண விளக்கம்.***

எனவே, அவரால் ஒன்றும் செய்ய முடியாமல் போவதற்கான காரணம் உண்டு. அந்த அமைதியான தோற்றத்தாலே ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் கடைசி வரையிலும் இரண்டில் ஒன்று பார்ப்போம் என்று சமுதாயத்தைத் தட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றேன். எனவேதான், இங்கு நான் பேச வேண்டுமென்று ஐயாவிடம் ஆசைப்பட்டேன். மக்களிடையே சொல்லிப் பார்ப்போம், செய்து பார்ப்போம், யாராக இருந்தாலும் வாருங்கள், கற்றுக் கொள்ளுங்கள் என்று.

எந்த மண்ணில் என்ன பயிர் போட்டால் வளரும்? இதில் வாழை வருமா? இதில் நெல் வருமா? இதில் மஞ்சள் பயிராகுமா? இதில்

இஞ்சி பயிராகுமா? இதில் தென்னைமரம் போடலாமா? அல்லது கொத்தமல்லி போடலாமா? அல்லது புன்செய் பயிர்தான் போட வேண்டுமா? கேழ்வரகு போட வேண்டுமா? கரும்பு வருமா? சோளம் வருமா? மண் வைத்து ஆராய்ச்சி செய்துதான் பயிர் செய்கின்றான்! அது மாதிரி, நீ வந்தாய் என்றால்?! நீ யார்? நீ எதைக் கும்பிடலாம்? நீ எந்தச் சாமியைக் கும்பிடலாம் என்று தெரிந்து கும்பிட வேண்டும். அதுவே, பல பேருக்குத் தெரியாது!

***சித்தர்களால் மட்டும் தான் அருளாளர்களை உருவாக்க முடியும்.***

அதனால்தான், சித்தர்கள் கைரேகையைப் பார்க்கச் சொன்னார்கள்! பிறப்பியல் என்கின்ற சாதகத்தைப் பார்க்கச் சொன்னார்கள்! சாமுந்திரிகாலட்சணம் 32 அங்க இலக்கணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். 32க்கு 32 அசைவு, அங்கவியல் சோதிடமும் சொல்லியிருக்கிறார்கள். மனையடிச் சாத்திரத்தைச் சொல்லி யிருக்கிறார்கள். 64 கலைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மனிதனை ஆராய்ச்சி செய்து பார்த்து, அப்புறம் அவனுக்குச் சொல்லிக் கொடு என்று சித்தர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பரம்பரையிலே வந்தவர்தான் இராமலிங்க அடிகளார். அவர் முகத்தைப் பார்த்ததுமே, தோற்றத்தைப் பார்த்ததுமே அருளாளர் என்று சொல்ல முடியும்.

கடலூரிலே ஆற்றங்கரையில்தான் போர் நடந்தது! அந்தப் போரிலே சங்கராச்சாரியார் கடைசியில் வரவில்லை! இராமலிங்க அடிகளார் மட்டும் சொற்பொழிவு செய்தார். உருவ வழிபாடு தேவை என்று! ஏனென்றால், அருளுலக அநுபவத்தில் சிறுபிள்ளைகள்தான் மக்கள் எல்லோரும். சின்னப் பிள்ளைக்கு புளியங்கொட்டையை வைத்து ஒன்று, இரண்டு எண்ணக் கற்றுக் கொடுப்பது போல! கடவுளுடைய பொம்மையை வைத்துத்தான், பத்தியை வளர்க்க வேண்டும் என்று சொல்லி, உருவ வழிபாடு தேவை என்று சொல்லியவர்தான் இராமலிங்க அடிகளார்.

***உருவ வழிபாட்டை வலியுறுத்தியவர்தான் இராமலிங்க அடிகளார்***

இன்றைக்கு இராமலிங்க அடிகளாரின் பத்தர்கள் என்ன செய்கிறார்கள்? இராமலிங்க அடிகளார் பேரைச் சொல்லிக் கொண்டு, உருவ வழிபாடு தேவையில்லை, வெறும் சோதியை மாத்திரம் கும்பிடுங்கள்! வெறும் விளக்கை மாத்திரம் கும்பிடுங்கள் என்கின்றார்கள்!

அது எவ்வளவு பெரிய தவறு! இப்படி நிறையச் சிக்கல்கள் இருக்கின்றது. நிறைய வரலாற்று இருட்டடிப்புக்கள் இருக்கிறது. அருட்பாவை நிறைவாகப் புரிந்து கொள்ள, அருட்பாவை நிறையச் சொல்லி விளக்கம் சொல்லுகிறேன்.

சித்தர் வரும் தருணம் இது என்று நிறைய ஐயா பாடுகின்றார். இறைவனிடம், சிவபெருமானிடம் அப்பா என்று கூப்பிட்டு, ஐயா என்று கூப்பிடுகிறார், அண்ணா என்று கூப்பிடுகிறார், அத்தா என்று கூப்பிடுகின்றார், இது எல்லாம் அருட்பாவிலே இருக்கும். ஒவ்வொரு முறையிலே கூப்பிடுகிறார், ஐயா என்று கூப்பிட்டு, அப்பா என்று கூப்பிட்டு, அண்ணா என்று கூப்பிட்டு, அத்தா என்று கூப்பிட்டு, அப்புறம் அம்மா என்று கூப்பிடுகிறார்.

கூப்பிட்டு என்ன கேட்கிறார்? செத்தாரை எழுப்புதல் எனக்கு வேண்டும்! என்று கேட்டார். நாம் என்ன கேட்போம்? கேட்டது கிடைத்ததா என்று கேட்போம். ஆறும் திருமுறையிலேதான் பதில் வருகிறது, அதனாலேதான், இராமலிங்க அடிகளார் அருளுலகப் படிப்பில் ஒன்றும் வகுப்பிலேயிருந்து படித்து M.A., Ph.D. பட்டம் வாங்கினார்! நீ Ph.D. பட்டத்தை மட்டும் காட்டாதே என்கிறேன்.

எல்லோரும் இராமலிங்க அடிகளாரை வைத்துக் கொண்டு, ஆறும் திருமுறையை மட்டும் காட்டிக் கொண்டு திரிகின்றார்கள், இது தவறு. ஐயா அவர்கள் ஒன்றும் வகுப்புப் படித்தார், அதெல்லாம் தெரிந்து கொள் என்கின்றோம்.

***இராமலிங்க அடிகளார் அருட்கல்வியில் படிப் படியாகத் தேறியவர்.***

இராமலிங்க அடிகளார் கடவுளே கூடாது, கடவுளே இல்லை என்று கூறினார் என்றும்; ஐயாதான் ஆண்டவர், சோதிதான் ஆண்டவர் என்றும் கூறுகின்றார்கள். அப்பொழுது திருவொற்றியூர் கோயிலில், ஐயாவுக்குத் தரிசனம் கொடுத்த ஒற்றியீசுவரர் இல்லாமல் போய் விட்டாரா? கண்ணாடியிலே தோற்றம் அளித்த முருகன் இல்லாமல் போய்விட்டானா? இல்லை, அவருக்கு நேரிலே தோன்றி வடிவுடை மாணிக்கவல்லி சர்க்கரைப் பொங்கல் கொடுத்துச் சாப்பிடச் சொல்லிச் சொன்னாளே அந்த வடிவுடை மாணிக்க வல்லி கிடையாதா?! வடிவுடை மாணிக்கவல்லி மாலையில் நூறு பாடல் பாடினாரே! அப்பொழுது இராமலிங்கம் பிள்ளை பைத்தியக்காரரா?

கற்பனையிலே பாடினாரா? கடவுள் கிடையாதா?

நாம் தெளிவு பெற வேண்டும் இன்றைக்கு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். பிறகு, என்னுடைய பேச்சை நீங்கள் பொறுமையாகக் கேட்கலாம். இதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இங்கொன்றும், அங்கொன்றுமாக நான் வேகமாகச் சொல்லுவதற்குக் காரணம்! இதெல்லாம் உங்களுக்குப் புரியாத ஒன்று!

ஐயாவுடைய புத்தகத்துலே எழுதியிருக்கிறார்கள், யாரோ ஒரு குருக்கள் மாதிரி வந்து, திருவொற்றியூரிலே, ஐயாவுக்கு, பிரசாதம் கொடுத்தார் என்று! ஏன் பொய் சொல்கிறாய்? ஐயாவே தெளிவாக எழுதியிருக்கிறார். உரைநடையிலே எழுதியிருக்கிறார். இவர் வீட்டில் திண்ணையிலே படுத்து இருக்கிறார், வீட்டுக் கதவு பூட்டியிருக்கிறது, திருவொற்றியூருக்குப் போய்விட்டு ஐயா வருகிறார். அண்ணாருக்குக் கோபம் வந்து கதவைப் பூட்டிவிடுகிறார். அண்ணியார் வந்து சொல்கிறார்கள், உங்கள் தம்பிக்குச் சாப்பாடு என்று? அவனுக்குக் கொடுக்காதே, அப்பத்தான் அவனுக்குப் புத்தி வரும் என்று அண்ணார் கூறுகிறார். ஆனால், அவருக்குத் தெரியும், தம்பி திருவொற்றியூர்க் கோயிலுக்குப் போயிருக்கிறார் என்று, அண்ணியாரும் வருத்தத்தோட படுத்து இருக்கிறார்கள்! சன்னலிலே அண்ணியாரைப் பார்க்கிறார், அண்ணன் தூங்கிய பிறகுதான் சோறு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது நடந்தது. நீ படுத்து இரு, நான் பிறகு உனக்கு சோறு தருகிறேன் என்று சன்னல் வழியே சாடை காட்டுகிறார்கள், சரி என்று படுத்து விட்டார், திண்ணையிலே படுத்துத் தூங்குகிறார். அண்ணியாரும் களைப்பில் தூங்கி விட்டார்கள்.

***வடிவுடைய அம்மன் அடிகளாருக்கு உணவு கொடுத்த வரலாறு***

வடிவுடைய மாணிக்கவல்லியே நேரில் வந்து எழுப்புகிறார்கள்! எழுப்பி அங்கே படைத்த சர்க்கரைப் பொங்கலை, நெய்ப் பொங்கலை கொடுக்கின்றார்கள். இவர் சாப்பிடுகிறார். இவ்வளவு சர்க்கரைப் பொங்கல், நெய்ப் பொங்கல், இவ்வளவு நன்றாக இருக்கிறதே என்று எல்லாவற்றையும் சாப்பிடுகிறார்! சாப்பிட்டு விட்டு, அந்த இலை மிச்சம் அப்படியே போட்டு இருக்கிறார்.

விடிந்து எழுந்ததும், அண்ணியார் வந்து சொல்கிறார்கள், “அப்பா நீ இராத்திரி பூராப் பட்டினியாக் கிடந்துட்டியே”. அப்படிச் சொல்லும்போது,

“இல்லையே அண்ணி, இராத்திரி நீங்க சர்க்கரைப் பொங்கல் கொடுத்தீங்களே!” என்று கேட்கிறார். அவர்கள், ஓடிப் போய் தன் கணவர்கிட்டே சொல்லுகிறார்கள். அப்பொழுதுதான் அந்த இலையைக் கொண்டு உள்ளே காட்டுகிறார். அப்பொழுதுதான், அண்ணார் வந்து இப்படியே சொல்கிறார். “சீர்காழியிலே உண்ணாமுலையம்மன் திருஞானசம்பந்தருக்கு பால் கொடுத்தது போல், அந்த அம்மையாரே வந்து, உனக்குச் சர்க்கரைப் பொங்கல் கொடுத்து இருக்காங்கப்பா! திருஞானசம்பந்தருக்கு வெறும் பால் கொடுத்தாங்க! உனக்கு சர்க்கரைப் பொங்கலே கொடுத்திருக்காங்க! நீ எவ்வளவு உயர்ந்தவன். உன்னைப் பத்தி தெரிஞ்சிக்காமப் போயிட்டேனே’ என்று வருத்தப்படுகிறார். இந்த பெரிய வரலாற்றைச் சொல்லுவதில் என்ன தப்பு வந்துவிட்டது? நீ திருவொற்றியூர் கோயிலுக்குப் போனால், இதை ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள். வடிவுடைய மாணிக்கவல்லி வந்து இராமலிங்க அடிகளுக்கு சோறு ஊட்டுவது போல். நீங்கள் வரலாறு எழுதினாலும் அது பொய் என்று மறுக்க வேண்டும் அல்லவா? ஒரு அர்ச்சகர் வடிவிலே வந்தான் என்று ஏன் எழுதுகிறாய்?

இங்கே இருப்பவர்கள் எல்லாம் சிந்திக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். தமிழன் என்றால் ஏன் இந்தக் குழப்பம்? இராமலிங்க அடிகளாரின் வரலாற்றிலே ஏன் குழப்பம் செய்கிறீர்கள்? வடிவுடைய மாணிக்கவல்லியே நேரில் வந்து சோறு கொடுத்தார்கள் என்று சொன்னாள், இராமலிங்க அடிகளுக்குப் புகழ் வந்துவிடும் என்று பயப்படுகிறாய்! இராமலிங்க அடிகளைக் கும்பிடுகின்ற மாதிரிக் கும்பிடுகிறாய்!

பல்லாயிரக் கணக்கான கோயில்கள் இருக்கின்றன, 144 வகைக் கோயில் இருக்கின்றது என்று சொன்னேன். அதிலே முக்கியமாக 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சீவாலயங்கள். இதிலே மத வேறுபாடு இல்லை, சாதி வேறுபாடு இல்லை! குல வேறுபாடு இல்லை!

நான் கருணீக்க சைவ வேளாளர் என்று சொன்னதை, சாதியைச் சொன்னேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. “கருவை நீக்குகின்ற ஒரு பரம்பரை, அருள் பரம்பரை”. கருவூரார் என்று ஒரு சாதியில்லை, கருவிலே ஊறாத நிலையை, பிறப்பிறப்பற்ற நிலையிலே ஒரு பரம்பரையே இருக்கிறது! அவ்வளவுதான், இப்பொழுது போலீசுகாரர் பரம்பரை,

வக்கீல் ஐயா, டாக்டர் மகன் என்று சொல்கிறார்கள் இல்லையா, அது மாதிரி இது. டாக்டர் வீட்டுப் பிள்ளை என்கிறார்கள் இல்லையா, வக்கீல் ஐயா வீட்டுப் பிள்ளை என்கிறார்கள் இல்லையா! மணியக்காரர் வீட்டுக் குடும்பம் என்று சொல்லுவார்கள் அதுமாதிரி, நாட்டில் இருக்கிறது கருவூரார் பரம்பரை, கருவை நீக்குகின்ற பரம்பரை என்று. அவ்வளவுதான், கணக்குப் பிள்ளைக் குடும்பம் என்று சொல்வார்கள், வாத்தியார் வீட்டுப் பிள்ளை என்று சொல்வது மாதிரி, போலீசுகாரர் குடும்பம் என்று சொல்கிற மாதிரி, அதாவது, இங்கு சாதி என்பது இல்லை. ஆதியிலே சாதி கிடையாது, பாதியிலேதான் சாதி வந்தது. இந்துமதத்தின் அழிவுக்குக் காரணமே சாதிவெறிதான். நாம் வளராததற்குக் காரணம், சாதிச் சண்டைகள்தான்.

***சாதிகள் இல்லை; பாரம்பரியத் தகுதிகள் பற்றி விளக்கம்.***

இந்துமதம், இசுலாமிய மதம், கிறித்துவ மதம் என்ற சண்டையே நமக்குத் தேவையே இல்லை. இந்தச் சண்டையை வளர்க்கக்கூடிய கட்சிகள் இருக்கின்றன. நாம் அது போல் இல்லை!

இராமலிங்க அடிகள் பெயரைச் சொல்லுபவர்கள் அருட்பாவைப் பாடுவதை எடுத்துக் கொள்ளுங்கள். அத்தோடு இராமலிங்க அடிகள் யார்? அவருடைய உண்மையான வரலாறு என்ன? அவர் சின்னப்பிள்ளையில் இருந்து வளர்ந்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும்! திடீர் என்று பெரிய ஆளாக வந்துவிடவில்லை! சின்னப்பிள்ளையில் இருந்து வளர்ந்தார்! பக்குவம் பெற்றார்.

மரம் என்பது ஒரு சின்னச்செடியிலிருந்து மரமாகி, அதுவும் பருவத்திலேதான் பூக்கும், காய்க்கும், கனியும். மாம்பழம் வருடம் முழுவதும் பழம் தராது. அதுபோல, இராமலிங்க அடிகளார் அவ்வப்பொழுதுதான் பாடல் பாடினார். ஆயுள் முழுவதும் பாடிக் கொண்டு இருக்கவில்லை. அங்கங்கே போகும்பொழுது பாடல் பாடினார். அவர் பாடிய பாடல் ஏராளம்! கிடைத்திருப்பதுதான் பன்னிரெண்டாயிரம். எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பாடியதிலே கடைசி வார்த்தையைச் சொன்னது ஆறும் திருமுறை. மற்றப் பாடல்களை

***இந்துமதக் கோயில்களில் வழிபாடு செய்துதான் இராமலிங்க அடிகளார் உயர்ந்த நிலை பெற்றார்.***

அவர் மறுக்கவில்லை, அதையும் சொல்லுகிறார். பக்குவம் பெற்றார். அந்த ஆறும் திருமுறையை மட்டும் வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லாம் பெற்றுச் சித்தி பெற்றார்! வெறும் சோதியை மாத்திரம் வழிபடு என்று சொல்லுகிறார் என்று சொல்லி. இந்த அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி! என்று சொல்லுவதற்குக் காரணம், உங்கள் அகத்திலே இருக்கக் கூடிய இருளை அகற்று! புறத்து இருளையும் அகற்று! மற்றவர்களின் இருளையும் அகற்று! அருளுலக இருள், பொருளுலக இருள் எல்லாவற்றையும் அகற்று என்றுதான் சொல்லுகிறார் என்று கூறி இந்த உரைக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

***அருட்பெருஞ்சோதி வழிபாட்டின் உண்மை விளக்கம்.***

இவ்வளவு நேரம் பொறுமையாக பல அலுவல்களுக்கிடையே உட்கார்ந்து இருக்கிறீர்கள். எனக்குத் தெரியாது - நான் ஆர்வத்தின் காரணமாக நெடுநேரம் பேசி விட்டேன் என்று நினைக்கின்றேன். நான் கல்லூரியிலே மணிக்கணக்காகப் பேசக் கூடியவன், சுற்றுப் பயணங்களிலும் எங்குச் சென்றாலும் மணிக்கணக்கில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசக் கூடியவன். எனவே, கேட்கிறேன், உங்களுக்கு நிறையத் தெரிய வேண்டும் என்ற ஆர்வத்திலேதான் சொன்னேன். இனி நீங்கள் கேள்விகளை எழுப்பிக் கொண்டு பாடத்தைக் கேட்டீர்கள் என்றால் உண்மை வரலாறு தெரிந்து கொள்ளலாம்.

இராமலிங்க அடிகளாரின் உண்மை வரலாற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். எங்களிடம் நிறையப் புத்தகம் இருக்கிறது. நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும், வாங்கிப் படித்துக் கொள்ளலாம்.

இந்தக் கோயிலுக்கு நிறைய வர வேண்டும். மற்றவர்கள், பலவற்றையும் சொல்லி இந்தக் கோயிலுக்கு ஏதாவது ஒரு வருமானத்தை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்.

மாத வருமானம் ஒரு 50 ரூபாய், 60 ரூபாய்க்கு மேல் கூட இல்லை. தொடர்ந்து கற்பூரம் ஏற்றுவதற்குக் கூட வசதிகள் கிடையாது. அவரவர் ஆளுக்கு எட்டணா, நாலணா போட்டுவிட்டுப் போனால் கூட முடியும். அந்த ஒரு பெரிய உதவியைச் செய்யணும். இங்கே நோட்டீசு அடிக்க வேண்டும் என்றால் கூட என் செலவிலேதான் நோட்டீசு

அடித்திருக்கிறேன். அதனாலே, எல்லோரும் மனம் உவந்து இங்கே எண்ணெய் விளக்குக்கு எண்ணெய் கொடுக்கின்றதோ, ஒரு கற்பூரம் கொடுக்கின்றதோ, சிறுசிறு உதவிகள் செய்கின்றதோ அல்லது நினைவுத் திருப்பணி செய்கிறதோ, செய்ய வேண்டும். இந்தத் திருப்பணி நடந்து நிறைவேற முடியாமல் இருக்கின்றது. காலாகாலத்துக்குக் கேட்டுச் செய்யுங்கள். சிறுதுளி பெருவெள்ளம் என்று பலபேரிடம் நீங்கள் வாங்கிக் கொடுத்துச் செய்ய வேண்டும்.

அருட்பெருஞ்சோதி ஆண்டவருடைய ஆலயம், ஐயா இருக்கின்ற இடம் ஒரு ஆலயம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆலயம் வேறு, கோயில் வேறு தெரிந்து கொள்ள வேண்டும். 48 வகை வழிபடுநிலையங்கள் இருக்கின்றன; புத்தகம் போட்டு இருக்கின்றேன். இந்துமத விளக்கம் என்று ஐந்து ரூபாய்க்கு. அதிலே ஆலயம் வேறு, கோயில் வேறு என்று எல்லா விளக்கங்களும் இருக்கின்றது. 48 வகை இருக்கின்றது. அதனாலே, ஐயா இருக்கும் இடம் ஆலயம். ஏனென்றால், அவர் அழியாத நிலையை உடையவர்! இராமலிங்க அடிகளுக்குச் செய்கின்றது வீண் போகாது. நீங்கள் எல்லோரும் நன்றாக இருப்பீர்கள்! ஒளியோடு வாழ்வீர்கள்! விழிப்போடு, செழிப்போடு வாழ்வீர்கள்! எனவே, இராமலிங்கம் அடிகளாருக்கு உதவுங்கள், இந்த மடத்துக்கு உதவுங்கள். இந்த மடத்துக்காகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்ற ஐயா வீரபத்திரன் அவர்களுக்கு மிகுந்த நன்றி சொல்லிக் கொள்கிறேன். எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள்!

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!

தனிப் பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

# வள்ளலார் உரை-2

"... ... இராமகிருட்டிணர் தயாரித்த விவேகானந்தர் *'இந்தத் தத்துவத்தைப் புரிந்தவர்கள்தான் நிறையத் தேவை, அதற்காக தியாகம் செய்யக் கூடியவர்கள் நாங்கள்'* என்று சொல்லி, ஒரு மடத்தை வைத்தார், மடாலயத்தை வைத்தார். அந்தத் தவப்பள்ளியிலே நிறைய பேரை இராமகிருட்டிணருடைய தத்துவத்தைப் படித்து கொள்ளுங்கள் என்ருர். அப்புறம் போய் எல்லோரிடமும் சொல்லுங்கள் என்று சொன்ஞர்.

**_இராமலிங்க அடிகள் மடம் எவ்வாறு அமைய வேண்டும்? எப்படிச் செயல்பட வேண்டும்?_**

ஆஞல், இராமலிங்கம் அடிகள் பேரால் எத்தனை மடம் இருக்கிறது? வடலூரே இருக்கிறது! அங்கே ஒரு Open Hall எல்லோரையும் திறந்த வெளியாகவே அழைத்தார். வாருங்கள் இராமலிங்க அடிகளிடம் ஆர்வம் உள்ளவர்கள் எல்லாம் வாருங்கள்! வந்து இராமலிங்க அடிகளுடைய ஆறு திருமுறைகளையும் படியுங்கள். அதைப் பற்றி விவாதம் செய்யுங்கள். உங்கள் எல்லோருக்கும் சோறு போடுகிருேம். இடம் தருகிருேம். நீங்கள் இருங்கள், இந்தக் கேள்வியைக் கேளுங்கள், ஆறு திருமுறையிலே ஐயங்களைக் கேளுங்கள்; பல புத்தகங்களை எழுதுங்கள்! நாடெங்கும் போய் இராமலிங்க அடிகள் தத்துவத்தைச் சொல்லுங்கள்; அப்படி யாராவது கேட்டு வந்தார்களா?

ஆண்டுக்கு ஒருமுறை அங்கு வடலூரில் கூடி கூட்டம் போட்டு, குய்யோ முறையோ என்று காக்காய்க் கூட்டம் போல் சத்தம் போட்டுவிட்டு, சாப்பிட்டு விட்டு, கையைக் கழுவி விட்டு, எச்சில் இலையைத் தூக்கிப் போட்டு விட்டுப் போய் விடுகிருர்கள்! [ஏன் இப்படிக் கூத்தடிக்கிருர்கள்?] ஆறு திருமுறை எழுதி வைத்திருக்கிருர் அல்லவா?; இந்த ஆறு திருமுறையையும் படிக்க வருகிறவர் எல்லாம் வாருங்கள்; ஆண்டு முழுவதும் தங்குங்கள்; 5 வருடம் 6 வருடம் படியுங்கள். கிறித்தவர்கள் எப்படிச் சாமியார்களைத் தயார் செய்கிருர்களோ? இராமகிருட்டிண மடத்திலே எப்படி தயார் செய்கிருர்களோ? இசுலாமியர்கள் எப்படித் தயார் செய்கிருர்களோ? அதுபோல வடலூரில் இராமலிங்க அடிகளார் திருச்சபையிலே தயார் செய்யுங்கள். அப்படி அல்லாமல், நான்கு அருட்பா பாடத் தெரிந்து விட்டால், அவர்களெல்லாம் குருமார்

ஆகிவிட முடியுமா? அருட்பாவை பாடத் தெரிந்தால் போதும் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள்!

அதற்கு அவர்கள் பொருள் சொல்லத் தெரியுமா என்றால் தெரிய வேண்டும் அல்லவா? அதுதான் முக்கியம். இன்னும் நாம் என்ன சொல்கிறோம் என்றால்; இராமலிங்க அடிகளையே குடத்துக்கு உள்ளே இருக்கின்ற விளக்கு போல் பல பேர் பூட்டி பூட்டி வைத்துக் கொள்கிறார்கள்! இராமலிங்க அடிகளைப் பற்றி நீ பேசாதே, உனக்கு உரிமையில்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இராமலிங்க அடிகள் பொதுச் சொத்து, உலகச் சொத்து, அவர் ஒருவர்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாடு என்கின்ற அளவுக்குப் போனார். பிறகு ஏன் அவரை உலகம் முழுவதும் வளர்க்க முடியவில்லை? இவருக்கு ஏன் இன்றைக்கு எல்லாக் கோயிலிலும் சிலை வைக்கக் கூடாது? நம்முடைய ஈ.வெ.ரா. பெரியார்தான் 64வது நாயன்மார் என்று நாம் அறிவித்திருக்கிறோம்! ஏன் இராமலிங்க அடிகளாரை நாயன்மார்கள் போல் ஏதாவது ஒரு பெயரிலே கோயிலிலே வைக்கக் கூடாது? ஏன் எல்லாக் கோயிலிலேயும் இராமலிங்க அடிகள் சிலையை வைக்க முடியவில்லை? கொண்டு வர முடியவில்லை?

***இராமலிங்க அடிகளுக்கு எல்லாக் கோயில்களிலும் சிலை வைக்க வேண்டும்.***

மலையாளத்திலே இருந்து வந்த ஐயப்பனுக்கு தமிழ்நாட்டிலே, எல்லா இடத்திலேயும் இன்றைக்கு கோயில் வைத்து விட்டார்கள் அல்லவா? என்கின்ற போது இராமலிங்க அடிகளாருக்கு ஆட்கள் இல்லையா? இராமலிங்க அடிகள் பெயராலே பெரியபெரிய பணக்காரர்கள் இருக்கிறார்கள். இராமலிங்கம் அடிகள் மேலே நல்ல வெறி பிடித்தவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள்.

ஆனால், அவர்கள் எல்லாம் ஏன் செயல்பட மாட்டேன் என்கின்றார்கள்? செயல்படத் தெரிய வில்லையா? அதாவது, இராமலிங்கம் அடிகளாருடைய அருட்பா சில பேருடைய கைக்குள்ளே மாட்டிக் கொண்டு முழிக்கின்றது! அதனாலேதான் இராமலிங்கரைப் பொதுவாக, பொது மன்றத்துலே பேச வேண்டும், செயலாற்ற வேண்டும், அப்படி ஒரு திட்டம் வரவேண்டும்!

சும்மா பாடலை ஓதுவதினாலே ஒன்றும் பயன் இல்லை! அப்படி ஒரு கண்ணோட்டத்திலே கொண்டு வரவேண்டும். இப்பொழுது இராமலிங்க அடிகளைப் பற்றி இங்கு விழா நடக்கின்றது. எல்லோருக்கும் அழைப்பிதழ்

கொடுத்து, கருத்தரங்கம் பேச வைத்திருக்க வேண்டும். அதை இன்னும் ஒழுங்கு படுத்த வில்லை.

இராமலிங்க அடிகளை எப்படி வெளிக் கொணருவது? என எண்ணும் போது, இராமலிங்க அடிகள் வரலாறுவது முழுமையாக வெளி வந்ததா? இந்தியா முழுவதும் தெரியுமா? பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராக் காரனுக்குத் தெரியுமா? கேரளாக் காரனுக்குத் தெரியுமா? ஏன் தெரியப்படுத்தக் கூடாது? அதைத் தெரியப்படுத்த என்ன செய்ய வேண்டும்? எனவே, இந்த விழாவிலே பேசுகின்றோம் என்றால், பலரையும் சிந்திக்க வைக்க வேண்டும்!

***இராமலிங்க அடிகளாரை உலகம் அறியுமாறு செய்தேயாக வேண்டும்.***

இராமலிங்க அடிகள் பெயராலே, இராமலிங்க அடிகள் சிந்தனை மன்றங்களை உருவாக்க வேண்டும். இராமலிங்க அடிகள் பேராலே பாராயணம் செய்பவர்கள் உண்டாகக் கூடாது. இன்றைக்கு இராமகிருட்டிணர் பேராலே இருக்கின்ற மடங்களெல்லாம் எப்படி இருக்கின்றன?! வெறும் பாராயண மடங்களாகவா இருக்கின்றன? அங்கே கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல், விவாத அரங்கங்கள், சொற்பொழிவுகள், பட்டி மன்றங்கள் நடக்கின்றன அதுபோல் இங்கேயும் நடக்க வேண்டும். அதோடு பயிற்சி முகாம்கள் நடக்க வேண்டும், பயிற்சி வகுப்புகள் நடக்க வேண்டும்.

இராமலிங்க அடிகள் சொன்ன அதே அருட்பெருஞ்சோதியை கும்பிடு, அதனாலே என்ன பயன் இருக்கின்றது?! மக்களுக்கு என்ன இலாபம் இருக்கின்றது? இது சமுதாய வாழ்க்கைக்கு என்ன பயன் தருகின்றது? அப்படிச் சிந்தித்தால்தான் முடியும்!

சமுதாய வாழ்க்கை என்றால், அரசியல் வாழ்க்கை என்றால், "*கருணையில்லாத ஆட்சி கடிது ஒழிக*" என்றார். அப்பொழுது இராமலிங்க அடிகள் அரசியலுக்கு வந்து விட்டார் என்று பொருள்! இவர் ஏன் அரசியல் பேசினார்? பேச வேண்டிய நிலை ஏன் வந்தது? இதைப் பற்றி யாராவது சிந்திக்கின்றார்களா? மதவாதி அரசியல் பேசியிருக்கார்! இதையெல்லாம் யாரும் சொல்லமாட்டேன் என்கிறார்கள்! அதையெல்லாம் நாம் உற்றுப் பார்த்தோம் என்றால்தான் இராமலிங்க அடிகள்,

***"படமுடியாது இனித் துயரம் படமுடியாது அரசே***
***பட்டதெல்லாம் போதும் ..."***

என்று பாடுகிறார். என்ன துயர் அவருக்கு வந்தது? யாராவது

சிந்திக்கிறார்களா? அதை ஆராய்ச்சி பண்ண வேண்டும்.

***"அடித்தது போதும் எனை அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனி ஆற்றேன்"***

என்று பாடுகிறார். அவரை ஏன் அடிக்கிறார்கள் அம்மை அப்பன்? 'அம்மை அடித்தால் அப்பா அணைப்பார்! அப்பா அடித்தால் அம்மா அணைப்பார்! நீங்கள் இரண்டு பேருமே அடிக்கிறீர்களே! என்ன ஆவது' என்று ஒரு இடத்திலே தவிக்கிறார். இந்தத் தவிப்பு ஏன் வருகிறது? அது என்ன தவிப்பு? அவருக்கு என்ன புலம்பல் இருந்தது?

***இராமலிங்க அடிகளார் பாடியதை பகுத்து ஆராய்வது எப்படி?***

அதெயெல்லாம் யாரும் சிந்திக்க மாட்டேன் என்கிறார்கள்! சிந்திக்க வருகின்றவர்கள் பேசினால் யாரும் பேச விட மாட்டேன் என்கின்றார்கள்!

அதனாலே, சித்தர்கள் அருளுரை, அறிவுரை, அறிவார்ந்த அருளுரை, அருளார்ந்த அறிவுரை என்று நான்காகப் பிரிக்கின்றார்கள். அது மாதிரி இராமலிங்கம் அடிகளைப் பார்த்தால், அருளை வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்புறம் அறிவோடு ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்புறம் அறிவார்ந்த அருளை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்புறம் அருளார்ந்த அறிவை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அப்படி யெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்கு எல்லோரும் தயாராக வரவேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை கூடி கொடியேற்றி, மூன்று நாள் பாராயணம் பண்ணி சாப்பாடு போட்டு, பிரிந்து விட்டால் சரியாகப் போய் விட்டது என்று நினைத்து விட்டார்கள்!

இன்னொன்றும் சொல்ல வேண்டும் உங்களுக்கு; ஒரு காலத்திலே பட்டினத்தார் வாழ்ந்து மறைந்த உடனே ஏதோ ஒரு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பட்டினத்தார், பட்டினத்தார் என்று இன்றைக்கு இராமலிங்க அடிகளுக்கு மன்றம் வைத்திருப்பது போல் தமிழ்நாடு எங்கும் பட்டினத்தாருக்கு மடம் இருந்தது.

அடுத்ததாக சாதிவெறி பிடித்த செட்டியாரைச் சேர்ந்தவர்கள் மட்டும் தங்கள் சாதியில் பிறந்தவர் என்று பட்டினத்தார் மன்றம் வைத்துக் கொண்டு இருந்தார்கள்! ஆனால், காலப்போக்கிலே பட்டினத்தாரை மறந்து விட்டார்கள்!

அதேபோல அருணகிரிநாதரின் பாடல்களுக்கு ஒரு பெரிய புகழ் இருந்தது, ஒரு பெரிய வரவேற்பும் சில நேரத்திலே இருந்தது.

நாடெங்கும் அருணகிரியார் மன்றம்; முருகன் கோயில் எங்கெல்லாம் இருந்ததோ, அங்கெல்லாம் அருணகிரியார் பாடலைப் பாடினுர்கள். அருணகிரியார் புகழ் ஓகோ என்று இருந்தது. அருணகிரியார் பாட்டுத்தான் பாடவேண்டும், முருகனை வழிபட வேண்டும் என்று சொல்லி இப்படியே செய்துகொண்டு இருந்தார்கள். இன்றைக்கு அருணகிரியார் இல்லாமலே போய் விட்டார். அவருடைய பாட்டுத் தெரியாமலே போய்விட்டது.

***பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரியார் ஆகியோரின் மன்றங்கள் வளர்ந்து ஒரு சில நூற்றுண்டுகளில் மறைந்த வரலாறும் காரணமும்.***

அருணகிரியாருக்கு நேர்ந்த கதி, பட்டினத்தாருக்கு நேர்ந்த கதி, தாயுமானவர்க்கு நேர்ந்த கதி இராமலிங்க அடிகளுக்கு வந்து விடக் கூடாது. இராமலிங்க அடிகளைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றுல்; இந்துமதத்தைப் பற்றி முழுவதுமாகச் சொல்ல வேண்டும். 63 நாயன்மார்களையும், 12 ஆழ்வார்களையும் சொல்ல வேண்டும். அதன் தொடர்ச்சியாக இராமலிங்க அடிகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். இதற்கு முன்னுல் சித்தர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஏன் என்றுல் சித்தர்கள்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்தவர்கள். ஏன் என்றுல் இராமலிங்க அடிகளே இது தொடர்பாக Statement கொடுக்கிறுர்.

***“வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினிலே வந்த ஒருவன் நான்”*** என்று கூறுகின்றுர். அப்படிச் சொல்லும்போது, அவர் ஒப்புக் கொள்கின்றுர், நான் திடீர் என்று புத்தர் மாதிரி அரச மரத்தடியிலே போய் உட்கார்ந்தவுடனே எனக்கு ஞானம் வந்து விட்டது என்று சொல்லவில்லை.

நான் வெறும் பேச்சுக்காக இதைச் சொல்ல வில்லை, முன்னேர்களை வழிபடலும், மூத்தோர்களை மதித்தலும் என்கின்ற சித்தர் நெறிப்படி நான் முன்னேர் வழி வந்தவன் என்கிறுர். நான் சொல்வதெல்லாம் பழையது என்கிறுர். இப்படி இருந்தும் கூட சன்மார்க்க சங்கத்தினர் இராமலிங்கம் அடிகள் சொல்வதை அங்கே சொல்லாதே; எங்க ஐயாதான் கண்டுபிடித்தார் அருட்பெருஞ்சோதியை என்கின்றுர்கள்.

ஆனுல், நம்முடைய பழந்தமிழ் இலக்கியங்களிலே வெளியிட்டு இருக்கிறுர்கள்; தேவாரப் பாடலில் அருட்பெருஞ்சோதி என்றே வருகின்றது! திருமூலரும் சொல்கிறுர் அருட்பெருஞ்சோதி என்று! ஆனுல், அந்தச் சொல்லே புதியது என்கின்றுர்கள் இராமலிங்க அடிகளாரின் பத்தர்கள்!

அதனுலே, இராமலிங்க அடிகளே மாத்திரம் தனிமைப் படுத்திக் கொண்டே வந்தார்கள் என்ருல்! ஒரு காலத்திலே, இராமலிங்க அடிகளே மறந்து விடுவார்கள்! ஏன் என்ருல், *'இராமலிங்க அடிகளேப் பற்றி மட்டும் சொல்லு, நாலு பாட்டைப் பாடு. சாமியைக் கும்பிட்டுப் போ! சோறு போடுகிரேம், சாப்பிட்டுப் போ'* என்கிருர்கள்! இந்த நிலேமை ஏற்கனவே இருந்திருக்கிறது. வரலாற்றை ஒருமுறை புரட்டிப் பாருங்கள்!

அருணகிரியாரை மறந்தவர்கள், பட்டினத்தாரை மறந்தவர்கள், தாயுமானவரை மறந்தவர்கள் இராமலிங்க அடிகளேயும் மறப்பார்கள். எனவே, தமிழகத்திலே இராமலிங்க அடிகளே மறக்கக் கூடிய நிலேயை உண்டாக்கி விடாதீர்கள்.

***அருட்பெருஞ்சோதி என்பது புதிய ஒரு சொல் அல்ல!***

இராமகிருட்டிண மடத்திற்குப் போனுல், புத்தரைப் பற்றிப் பேசலாம்! முகமது நபியைப் பற்றிப் பேசலாம்! காரல் மார்க்சு பற்றிப் பேசலாம்! கம்யூனிசத்தைப் பற்றிப் பேசலாம்! பெரியாரைப் பற்றிப் பேசலாம்! இராமகிருட்டிண மடத்து பெரிய Libraryஇல் எல்லாப் புத்தகங்களும் இருக்கின்றன. இராமகிருட்டிண மடத்திலே போய் எந்த Subjectஐப் பற்றியும் பேசலாம். அதன் பொருள் என்ன என்ருல், அறிவைச் சார்ந்து அதை வளர்க்கின்ருர்கள்! இங்கே இராமலிங்க அடிகள் மடத்திலே அப்படிப்பட்ட வளர்ச்சி இல்லே! இங்கே இந்த மாநாடு எப்படி நடக்கின்றது? யாராவது நான்கு பேரைப் பேசக் கூறி, *'எங்க ஐயா பேரை மட்டும் சொல்; நாங்கள் கூறுவதை மட்டும் கேட்டுக் கொள்'* என்கிருர்கள். இவர்கள் பயப்படுகிருர்கள்.

இதேபோல் வடலூரிலே போய் என் பேரைச் சொன்னுல் பயப்படுவார்கள்! எல்லோரும் ஒரே மாதிரிதான் இருக்கின்ருர்கள். எல்லாம், 'ஒரே குட்டையிலே ஊறிய மட்டை' என்கிற மாதிரிதான் இருக்கின்றது. அங்கே தலேமை வடலூரிலேயும் பயப்படுகிருர்கள்; மாநாட்டிலேயும் பயப்படுகிருர்கள். நான் வந்து பேசினுல் கொலேயா விழுந்து விடும்?

வடலூரிலே நான் 1966ல் பேசியதற்கு பின்னுல் இன்று வரையிலும் அங்கே பேசவே இல்லே. இராமலிங்க அடிகளாரே புதுமையாகப் புரட்சியாகச் செயல்பட்டவராக இருக்கும் போது அவர் பத்தர்களாகிய நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? கருத்தைக் கண்டு பயப்படுகின்றவர்கள் எப்படி பயன்படுவார்கள்?

இராமலிங்க அடிகள் திடீர் என்று அருட்பெருஞ்சோதியை மட்டுமா கும்பிட்டார்?! எல்லாக் கோயிலிலேயும்தானே கும்பிட்டார்?! அவருடைய பாடலிலேயே ஆறு திருமுறையிலேயும் இருக்கின்றது.

ஏன் எல்லாச் சாமியையும் கும்பிட்டார்? எல்லாச் சாமியிடமும், 'சிறு துளி பெரு வெள்ளம்' என்கின்றது போல்; எல்லாச் சாமியையும் கும்பிட்டு, எல்லாச் சாமியிடமும் வாங்கிய அருளைச் சேர்த்துத்தான் பெரிய ஆளாக மாறினார். கையை ஊன்றி கரணம் போட்டு காலணா அரையணா சேர்த்துத்தான், சர்க்கசைப் (circus) பண்ணித்தான் பெரிய பணக்காரன் ஆகியது போல்; காளியிலேயிருந்து, மோகினியிலிருந்து, பிடாரியம்மனிலிருந்து, திருவொற்றியூர் அம்மனிலிருந்து, கொடியிடை அம்மனிலிருந்து, எல்லாவற்றையும் பாடிப்பாடி, கந்த கோட்டத்து முருகன் வரை எல்லாரையும் பாடி பெரிய ஆளாக மாறினார். எல்லோரும் அருட்பிச்சை போடவில்லை என்றால், அவர் பெரிய ஆளாக மாறியிருப்பாரா? சிவபெருமானே பிச்சாண்டியாத்தானே இருக்கார். எனவே, இராமலிங்க அடிகளார் அருளைத் துருவித் துருவிக் கேட்டார். அழுது அழுது கேட்டார்.

சில வீட்டிலே சில பிள்ளைகள் சிரித்துக் கொண்டே காசு கேட்கும். சில பிள்ளைகள் அழுது அழுது கேட்கும். இராமலிங்கம் அடிகள் அழுது அழுது அருளைக் கேட்ட ஆள்! எங்கேயாவது, சிரித்துக் கொண்டே கேட்கிறாரா? ஏன் அழுகின்றார் சும்மா? அதைப் பார்க்க வேண்டும். அந்த நிலைமையையெல்லாம் கருத்து ஊன்றிப் பார்க்கவேண்டும். செல்லப் பிள்ளையா? அழுகிணிப் பிள்ளையா? நோஞ்சான் பிள்ளையா? இராமலிங்க அடிகள் ஆண்டவன் கிட்டே எப்படி இருந்தார்? என்ன பிள்ளையாக இருந்தார்? அதெல்லாம் கேட்க வேண்டும். பயப்படக் கூடாது. தீ என்று சொன்னால், நெருப்பு என்று சொன்னால் வாய் சுட்டு விடாது. அதனாலே, அருட்பாவை எடுத்துக் கொண்டு வா, பேசுவோம். நானும் ஆள் கொண்டு வருகின்றேன், நீயும் ஆள் கொண்டு வா, பேசுவோம். பேசுவதற்கே நீ பயந்தாய் என்றால்? நீ எப்படி புரட்சியை செய்யப் போகின்றாய்?

***இராமலிங்க அடிகள் ஏன் எல்லா வகைக் கடவுள்களையும் கும்பிட்டார்?***

அருளுலகத்தில் புரட்சியும், புதுமையும் விளைய வேண்டும் அல்லவா?! இராமலிங்க பிள்ளை பொய்யானதையா சொல்லிவிட்டுப் போய் விட்டார்? அவர் தாம் என்னென்ன இன்பம் அடைந்திருப்பதாகத் தானே

பாடியிருக்கின்ருர்! அதேபோல் துன்பப்பட்டதைப் பாடி இருக்கின்ருர்! ஆனுல், எப்படி அவருக்கு இறைவன் கிடைத்தான் என்பதற்கு விடை சொல்லியிருக்கின்ருரா? சொல்ல வில்லையே! அது இருக்கின்றதா என்று தேடிப் பார். அது உனக்குத் தெரியவேண்டும் அல்லவா? தெரியவில்லை என்ருல் தெரிந்தவர்களைக் கேட்டுப் பார்க்கலாம் அல்லவா!

***இராமலிங்க அடிகளார் பாடியதன் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள சித்தராகிய குருதேவரிடம் வந்தால்தான் முடியும்.***

உங்கள் வீட்டு கிணற்றிலே பலகை விழுந்து விட்டது. எடுக்க முடியவில்லை. பாதாள கரண்டி போட்டு எடுக்க முயற்சிக்கின்ருய், எடுக்க முடியவில்லை! அப்பொழுது என்ன செய்வது? யாருக்கு கிணற்றினுள் இறங்கி ஆழம் பார்க்கத் தெரியும் என்று பார்த்து, அந்த ஆளைக் கூப்பிட்டுத்தானே பலகை எடுக்கின்ருய்?.

அது மாதிரி, நீ நூறு வருடமாக இராமலிங்க அடிகள் பாட்டைப் படித்துப் பார்த்தாய். எதுவும் புரியவில்லை. எனவே, அதைத் தெரிந்த ஆட்கள் யார் என்று பார்த்து கூப்பிட்டுப் பார்.

நாங்கள் சித்தர்கள் இருக்கின்ருேம். இராமலிங்கம் அடிகள் என்ருல் என்ன? நாங்கள் சொல்லித் தருகின்ருேம்! அதைத்தான் நாங்கள் சொன்னுல், பேச்சைக் கேட்க மாட்டேன் என்கின்றீர்கள்! நீங்கள் இந்த நூறு வருடத்தில் வெற்றி பெறவில்லையே?

**நூறு வருடமாகப் படித்த ஆட்களுக்கு இராமலிங்க அடிகள் பாட்டு புரியவில்லை! யாரும் கோபப்படக் கூடாது! இராமலிங்கம் அடிகள் பாட்டு புரிந்தது என்ருல் நீங்கள் இராமலிங்க அடிகளாக மாறியிருக்க வேண்டும். ஐயா! திருப்பதிக்குப் போகின்ற வழி இதுதான்.**



# வள்ளலார் உரை-3

**"உற்ற மொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே**
**உறவனன்றிப் பகைவனென எண்ணாதீர் உலகீர்!**
**கற்றவரும் கல்லாதவரும் அழிந்திடக் காண்கின்றீர்!**
**கரணமெலாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ?**
**சற்றுமிதைச் சம்மதியாது என் மனம்தான் நுமது**
**தன்மனம்தான் கன்மனமோ, வன்மனமோ அறியேன்**
**இற்றிதனைத் தடுத்திடலாம் என்னோடு சேர்ந்திடுமின்**
**என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம்தானே"**

என்று வாழ்நாள் முழுதும் அழுது அழுது கூறியவருடைய பேரன்தான் வந்திருக்கின்றேன். நீங்கள் வணங்குகின்ற இராமலிங்க அடிகளார் வாழ்நாள் முழுதும் அழுதார்!

நான் நினைக்கும் பொழுது, பாடும் பொழுதெல்லாம் உணர்வுகளை அடக்க முடியாமல் துடிதுடிக்கின்றேன். இவற்றை அவர் எழுதிய காலத்திலே என்னென்ன பாடுபட்டு இருப்பார்?

***நினைந்துநினைந்து உணர்ந்துஉணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே***
***நிறைந்துநிறைந்து ஊற்றெழும் கண்ணீர்அதனால் உடம்பு***
***நனைந்துநனைந்து, அருளமுதே, நன்னிதியே, ஞான***
***நடத்தரசே என்உரிமை நாயகனே என்று***
***வனைந்துவனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்***
***மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்***
***புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்லுகின்றேன்***
***பொற்சபையில், சிற்சபையில் புகும் தருணம் இதுவே.***

எதற்காகச் சத்தியம் செய்கின்றார்? பின்னால் பேரன் ஒருவன் வருவான், மேடையிலே அழுது பாடட்டும் என்பதற்காகவா? இல்லை! மக்களே! இராமலிங்க அடிகளாரின் பாடலைப் பாடிப் பாடி மது வெறி போல, ஒரு வெறி கண்டு இன்பம் கண்டு மாண்டு போகிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். உலகின் இன்பத்தை யெல்லாம் மறந்தும், துறந்தும் போகச் செய்யக்கூடிய அந்த ஆற்றல் இராமலிங்க அடிகளார் பாடலுக்கு உண்டு. ஆனால், அங்கே, அறிவார்ந்த சிந்தனைக்கு இடமில்லை.

யாம் உணர்வு வயப்பட்டுப் பேசுகிறோம். வருத்தப்படுகிறோம். அடுத்து நிறைய பேச்சுக்கள் இருக்கின்றன. ஏனென்றால்,

**"சித்தியெல்லாம் தந்து திருஅம்பலத்தே ஆடும்**
**நித்தியன் என்னுள்ளே நிறைகின்றார். சத்தியம் இது.**
**அந்தோ! உலகீர் அறிவீரோ!? நீவிரெல்லாம்**
**சந்தோடமாய் இருமின் வாழ்ந்து"**

இராமலிங்க அடிகள் என்ன சொல்லுகிறார்? நீங்களெல்லாம் சந்தோசமாய் இருங்கள். கவலைப் படாதீர்கள்! எதைப் பற்றி? சாவைப் பற்றி! துன்பத்தைப் பற்றி! ஏன் தெரியுமா? என்னிடத்திலே வந்து விட்டான் அந்த நித்தியன், திரு அம்பலத்திலே ஆடுகிறவன் என்று சொல்லுகிறார்.

இப்படி நான் பேசிக் கொண்டு போனால், விடிய விடிய அவர் பேசியது போல், மாதக் கணக்கிலே கூட பேச முடியும். ஆனால், நான் இந்த நாட்டு மக்களின் பாட்டாளி வர்க்கத்தை, ஏழை, எளிய மக்களை, அறியாத மக்களை எல்லாம் தொட்டு, தட்டி, அரசியல் புரட்சிக்கும், சமுதாயப் புரட்சிக்கும் வித்திட வேண்டியதற்காகப் புறப்பட்டு இருக்கிறேன் என்கின்ற பொழுது, இப்படியொரு தவக் கோலத்தை போட்டிருக்கிறேன் என்கின்ற பொழுது, பதினெட்டாண்டுகள் அனைத்தையும் பயின்று, பதினெட்டாண்டுகள் நாடோடியாக, காடோடியாக வாழ்ந்து முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு M.A., Ph.D.யை முடித்துக் கொண்டு அதற்குப் பிறகும் இன்றைக்குத் தொழிலிலே இறங்கிய பிறகு, சில ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையிலும், இந்தக் கோலத்திலே யாம் ஊர்ஊராக யாம் வருகிறோம் என்றால்,... ...

**"கருணையிலா ஆட்சி கடிது ஒழிக ஒழிக"**

என் தாத்தாவால் அவ்வளவுதான் செய்ய முடிந்தது. அவர் மென்மையானவர், எதையும் அன்பாகப் பார்க்கக் கூடியவர்; ஒரு மண்கட்டி உடைந்தால் கூட மணிக்கணக்காக உட்கார்ந்து அழக் கூடிய மென்மையான இதயம் படைத்த அவர் இந்த நாட்டிலே கருணையிலாத ஆட்சி போல் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு, 'ஒழிக' என்று மட்டும் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதை யார் அழிப்பது? திரிசூலத்தோடு யாம் புறப்பட்டு இருக்கிறோம்! உங்களுடைய அனைவரின் ஒத்துழைப்பும் எமக்குத் தேவை.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது ஒரு அரசியல் இயக்கம், ஒரு சமுதாய இயக்கம். இந்த நாட்டிலே இரக்கமற்ற, அரக்கப் போக்குடைய தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வுகள் இருக்கின்றன. அனைத்தையும் திருத்தியே ஆக வேண்டும் ஆண்டவன் பெயரால்! எனவே, இருளகற்றுவதற்காக அருளாட்சி

அமைக்கப் புறப்பட்டு இருக்கும் எனக்கு உதவி செய்யுங்கள். உங்கள் முன்னாலே பறக்கின்ற சிவலிங்கக் கொடியை, இது சைவ மதத்திற்குரியது. வைணவ மதத்திற்கு இல்லை என்று கூறிட வேண்டாம். சிவலிங்கம் என்றாலே ஆவி, ஆன்மா, ஆருயிர் என்று பொருள். அது ஒரு வடிவம். மனித உயிரின் வடிவம் அவ்வளவுதான். மூன்று பட்டை போட்டிருக்கிறதென்றால், ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் இணைந்திருக்கிறது என்று பொருள். சிவப்புப் போட்டிருக்கிறது என்றால்? உயிரினுடைய தத்துவம் என்று பொருள். இங்கே உங்களுக்குக் கொடி ஏற்றியிருக்கிறேன் என்றால் அதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

***சிவலிங்கக் கொடியின் விளக்கம்***

அருளாட்சிக்காகப் புறப்பட்டிருக்கிறோம் யாம்! எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய கடவுள்கள், அதையும் தெரிந்து கொள்ள வேண்டும்! கடவுள் வேறு, தெய்வம் வேறு, ஆண்டவன் வேறு, பட்டவர் வேறு, அல்லா வேறு, எல்லா வேறு, தேவதை வேறு, தேவி வேறு, அமரர் வேறு, இருடி வேறு என்று நாற்பத்தெட்டு வகையான கடவுள்கள் இருக்கின்றன.

அதைத் தெரிந்து கொள்ளுங்கள். 5 பைசா, 10 பைசா, நாலு அணா, எட்டணா, 1 ரூபாய், 100 ரூபாய் நோட்டு என்று நாணயத்திலே வேறுபாடு இருப்பது போல் அருளுலகத்திலே இருக்கக் கூடிய கடவுள்களுக்கிடையே நாற்பத்தெட்டு வகை உண்டு.

பேயும் கடவுள், பிசாசும் கடவுள்தான். சில பேர் பேயைத்தான் கும்பிடுவார்கள். சிலர் பிசாசைக் கும்பிடுவார்கள். சிலர் தெய்வத்தைக் கும்பிடுவார்கள்! அவனவன் முற்பிறப்புக்கு ஏற்ப, ஊழ்வினைக்கு ஏற்பத்தான், கடவுளைக் கூடத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். அதனால்தான், காட்டேரி, கருப்பு, இடாகினி, மோகினி, யட்சனியில் ஆரம்பித்து, என் தாத்தா அருட்பெருஞ்சோதி என்று சொல்லி விட்டுப் போனாரே அதுவரைதான் இருக்கிறது.

***கடவுள்களின் வகைகள் பற்றிய விளக்கம்.***

எனவே, எந்தக் கடவுளையும் இகழாதே! எந்தத் தெய்வத்தையும், தேவதையையும் இகழாதே. அந்தப் பழக்கத்தைக் கற்றுக் கொள். எல்லோருக்குமே கடவுள் தன்மை உண்டு. இந்த ஒரு மாபெரும் தத்துவத்தைத்தான் வெறும் சோதி வழிபாடு என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் சொல்லிய மோகன மொழி, ஞானமொழி

புரியாத காரணத்தினுல்தான் நாம் வடலூர் வள்ளலார் அவர்கள் உருவ வழிபாட்டை வேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்று தவருக எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். யாம் வெளியிட்டு இருக்கக் கூடிய குருதேவர் அறிக்கையில் இராமலிங்க அடிகளார் சிறப்பு இதழ் என்று ஒன்று வெளியிட்டு இருக்கிறோம். ஒரு ரூபாய்தான், அதைப் பார்த்தால் உங்களுக்கெல்லாம் என் மேல் கோபம் வரும், சண்டை போடலாம் என்று கூடத் தோன்றும். அதுபோல நிறையக் கருத்துக்கள் இருக்கும் அதிலே!

யாரும் என்னைத் தவருகப் புரிந்து கொள்ளத் தேவையில்லை. யாம் இந்துமதத்தின் தந்தை, எம்மில் 48இல் ஒரு பங்குதான் எமது தாத்தா. யாம் ஆயிரம் ஆண்டு இடைவெளிக்கு அப்புறம் வந்திருக்கின்றோம். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய கருவூருருடைய மகள் வயிற்றுப் பேரன் நான். எனவே, ஞானசித்தராகவும், நவநாத சித்தராகவும், 48 வகைச் சித்தராகவும் ஒன்று சேர்ந்து பதினெண்சித்தர் பீடாதிபதியாக இருக்கின்ற யாம் விடுக்கின்ற அழைப்பை அன்பு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஐந்தும் மூன்றும் எட்டு என்று தெரிந்தவர்கள் வைத்துக் கொண்டு யாம் இயக்கம் ஆரம்பித்திருக்கிறோம். தற்குறிகளை வைத்துக் கொண்டு அல்ல. எனவே, யாம் எழுதி வெளியிட்டு இருப்பதை அன்பு கூர்ந்து படியுங்கள். இராமலிங்க அடிகளாரின் பாடலைப் பேசுவதற்கு என்னிடத்திலே தெம்பு இல்லை. என்னை மறந்து, உணர்வு வயப்பட்டு விடுவேன். ஏனென்றுல், எதை நினைத்தாலும்,

**"எண்ணுகின்றேன் எண்ணங்கள் எல்லாம் தருகின்றுன்,**
**பண்ணுகின்றேன் பண்ணுவித்துப் பாடுகின்றுன்; உண்ணுகின்றேன்**
**தெள்ளமுதம் உள்ளம் தெளியத் தருகின்றுன்**
**வள்ளல் நடராயன் மகிழ்ந்து"**

இறைவன் ஓடோடி வந்து எல்லாவிதமான உதவிகளையும் தருகிருர். எண்ணத்துக்குள்ளே நிற்கிருர், செயலோடு நிற்கிருர். எனக்கு வயிறு பசிக்கிறது என்று இராமலிங்கம் பிள்ளை சொல்லுவதற்கும் முன்னுல் இறைவன் ஒரு கலயத்தைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்து 'இராமலிங்கம் இதோ அமுதம் இருக்கிறது. அதுவும் தெளிவான அமுதம், அதுவும் வண்டல் இல்லாத அமுதம் குடித்துக் கொள்' என்று பசியாறக் கொடுக்கிருராம். அந்த அளவிற்கு தெய்வமே ஓடிவந்து உதவி செய்கின்ற பெருவாழ்வு வாழ்ந்தவர்தான் இராமலிங்க அடிகளார்.

இதுபோல உலகிலே எந்த மதத்திலேயாவது ஒருவர் உண்டா? எந்த மதத்திலாவது கடவுள் தனக்கு வந்து சேவகனாக தொண்டு செய்ததாகச் சொல்லக் கூடிய மதம் உலகில் உண்டா? சித்தர்களின் உண்மையான தத்துவத்தை விளக்கியவர்தான் சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த வடலூர் இராமலிங்க அடிகளார்.

ஆனால், அவர் கூறிய கருத்துக்களைப் புரிந்து கொள்ளக் கூடிய மக்கள் நாட்டிலே இல்லை. அவர் பேரால் எண்ணற்ற மடங்கள் இருக்கின்றன, இயக்கங்கள் இருக்கின்றன, சபைகள் இருக்கின்றன, தலைவர்கள் இருக்கிறார்கள். யாரும் வருத்தப்படக் கூடாது. ஏறக்குறைய யாருக்குமே இராமலிங்க அடிகளாரைப் பற்றி முழு அளவு தெரியாது! அரையாக, முக்காலாகத் தெரிந்தவர்கள்தான் இருக்கிறார்கள்.

***இராமலிங்க அடிகளார் இறைவனிடம் பெற்ற அமுதம்.***

அதைப் பற்றி யாம் எழுதியிருக்கிறோம். யாரும் வருத்தப்பட்டு விடக் கூடாது. இராமலிங்க அடிகளாரோடு இரண்டறக் கலந்து ஒன்றியிருக்கக் கூடியவர்தான் யாம்!

**“ஆரணமும், ஆகமும் ஆங்காங்கு உரைக்கின்ற**
**காரணமும், காரியமும் காட்டுவித்தான் தாரணியில்**
**கண்டேன் கங்குல் பகலற்ற இடத்து**
**உண்டேன் அமுதம் ஏந்தி”**

அமுதத்தை இறைவன் பகலும் இரவுமற்ற விண்வெளிக்கு இராமலிங்க அடிகளைக் கூட்டிக் கொண்டு அங்கே நிறுத்திக் கொண்டு அமுதத்தைக் குடிக்கக் கொடுத்தாராம். Where?, When?, How?

இராமலிங்க அடிகளார் மிகத் தெளிவாக விஞ்ஞானத்தோடு சொல்லுகிறார். நான் அமுதம் குடித்தேன். எங்கே? இரவு பகல் அற்ற இடத்திலே, எங்கே? விண்வெளியிலே! எந்த அளவு? எல்லையில்லாத அளவு; அப்படி என்றால் என்ன பொருள்?

அதைக் குடித்தவுடனே எல்லாம் தெளிந்து விட்டதாம். அதுதான் அளவு! குடித்தால் ஆள் கீழே விழுந்து விட்டான். அதுதான் அளவு; அது மாதிரி இவர் குடித்தவுடனே தெளிந்து விட்டார்!

இராமலிங்க அடிகளாரைப் போல அமுதம் குடித்தேன், குடித்தேன், குடித்தேன் என்று சொன்னவர்கள் யாரும் இல்லை.

**“எல்லையிலா இன்பமெலாம் எந்தனையே எய்தி**
**நிறைந்தனவாம் வஞ்ச வினைகளெல்லாம் எனைவிட்டு**

**அகன்றனவாம் துன்பமெலாம் போன தொலைந்து**
**இன்பமெலாம் எனை நாடி எய்தின"**

இவ்வளவு தெளிவாக எந்த அருளாளன் கூறியிருக்கிறான்? நான் உங்களுடைய பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. இப்படி நிறைய பாடல்களைச் சொல்லிக் கொண்டு போனால் எந்தப் பயனும் இல்லை. இராமலிங்க அடிகளாருக்குப் பிறகு ஒரு இராமலிங்க அடிகளார் தோன்றினாரா? அன்பு கூர்ந்து சிந்திக்க வேண்டும்! இராமலிங்க அடிகளாருக்காக கரைந்து கரைந்து உருகி உருகி அப்படியே மறைந்தவர்கள் ஏராளம். ஏன் இன்னொரு இராமலிங்க அடிகளார் தோன்ற முடியவில்லை? அல்லது பெண்ணிலே யாராவது இராமலிங்க அடிகள் தோன்றியிருக்காரா? தோன்ற முடியாதா?

பன்னிரண்டாயிரம் பாடல்களிலே ஏறத்தாழ ஆறாயிரம் பாடல்களுக்கு மேல் பத்து பன்னிரண்டு வயதிலேயே எனக்கு மனப்பாடம். நான் பரம்பரையாகவே பண்டாரம். கோயில்களிலே பசனைப் பாடல்கள் பாடுகின்ற பண்டாரம் நாங்கள். பூசைத் தட்டும், பூசை மணியும் பிடித்திருந்த கையிலேதான் ஏடும் எழுதுகோலும் எடுத்து M.A., Ph.D. வரைப் படித்தேன். இன்றைக்கு நாட்டாட்சிக்காக கையிலே திரிசூலத்தைத் தூக்கியிருக்கின்றேன். ஏதாவது கோயிலிலே தேவாரம் பாடல் பாடிக் கொண்டிருக்கக் கூடிய பண்டாரம் நாங்கள், குருக்கள் நாங்கள். ஆனால், இன்றைக்கு அறிவு ஆயுதத்தோடு வந்திருக்கிறோம். ஏன்? எதற்கு? எப்படி? எப்பொழுது?

இந்து மதத்திலே இருக்கிற கடவுள் மனைவி, குழந்தைகளோடு இருக்கின்றார்! மனைவி குழந்தைகளே இல்லாத, தெரியாத கடவுள் எப்படி வாழும் மனிதனுக்கு உதவ முடியும்? என்று கேட்பதுதான் இந்து வேதம்! இதை நினைவிலே வைத்துக் கொள். பிறகு விளக்கமாகப் பேசுகின்றேன். இந்துவேதம் ஒன்றுதான் கடவுளுக்கு பிறப்பு உண்டு, இறப்பு உண்டு, பிறப்பிறப்பற்ற நிலையும் உண்டு என்று கூறுகின்றது.

வேறு எந்த மதத்திலாவது கடவுள் பிறக்கிறார் என்று சொன்னால் கொலையே நடக்கும்! தமிழன் தைரியமாகச் சொல்லுகின்றான். கடவுள்கள் இறக்கிறார்கள்! கடவுள்கள் பிறக்கிறார்கள்! பிறப்பிறப்பற்ற கடவுள்களும் இருக்கிறார்கள்! என்று சொல்லுகின்ற தமிழனே! உன்னுடைய ஆன்மீகத்தைக் கற்றுக் கொள்.

தமிழகத்திலே தமிழர்களிடையிலே வேறுபாடுகள் என்றைக்கு வந்தன? மாறுபாடுகள் என்றைக்கு வந்தன? முரண்பாடுகள் ஏன் வந்தன?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல இந்துமதத் தந்தையால்தான் முடியும்! உலகத்திற்குரிய குவலய குருபீடத்தால்தான் முடியும்.

கடவுள்களை உண்டாக்கக் கூடியவன் தமிழன்; மறந்து விடாதே! அந்தத் தமிழினத்தின் தலைவன்! தமிழ் மொழியின் தலைவன்! மெய்ஞ்ஞானத்தின் தலைவன்! ஞானாச்சாரியார் வந்திருக்கிறோம். தனிமனிதராக அல்ல! என் பின்னால், ஆயிரம் ஆயிரம் படித்த பட்டதாரிகள், சன்னிதானங்களாக! ஆதீனங்களாக! தம்பிரான்களாக! தயாராகி விட்டார்கள்! இட்டும், தொட்டும், சுட்டியும் ஞானம் வழங்கத் தயார்! உனக்கு தீட்சை தரத் தயார்! வாருங்கள் மானுடர்களே! உங்களைக் கடவுளாக்குகிறோம் என்று சொல்லுகிற தமிழர்களுடைய வேதம்; தமிழ் மொழிதான் தெய்வ மொழி! வேத மொழி! தேவ மொழி! ஆனால், இந்த மொழி ஏன் செத்துக் கொண்டிருக்கிறது?

கடலிலே தத்தளிப்பது போல், தமிழ்மொழி மெல்லமெல்ல மூழ்கிக் கொண்டிருக்கிறது. மூழ்கியே போகும் என்ற நிலையிலேதான் பூசைத் தட்டு, கற்பூரத் தட்டையும், மணியையும் கையிலே உள்ள பூசாறி கீழே வைத்து விட்டு; கையிலே மெய்ஞ்ஞானக் கொடியோடு, மயில்பீலியோடு வந்திருக்கின்றோம். எப்பொழுதும் யாம் திரிசூலம் கையிலே வைத்திருப்போம். இன்றைக்கு மெய்ஞ்ஞானக் கொடியோடு அமைதியோடு பேசுகிறோம். ஆனால், திரிசூலத்தோடு பேசுவது போல் பேசுகிறோம். பூசை மணியைக் கீழே வைத்திருக்கிறோம். கற்பூரத் தட்டையும் கீழே வைத்து விட்டு வந்திருக்கும் பூசாறி வந்திருக்கிறேன்.

***தமிழனுடைய இந்து மதத்தின் சிறப்பு***

பூசைகளை அறிந்தவன் பூசாறி. ஆசைகளை, சித்தங்களை அறிந்தவன் ஆசாறி. ஆன்மீகத்தைச் சரியென்று சொல்லக் கூடியவன் ஆச்சாரியன். ஆச்சாரியார்களுக்கு எல்லாம் ஆச்சாரியனாக இருக்கின்ற தமிழன் வந்திருக்கின்றேன். '*தமிழன் நீ இந்துமதத்தின் தலைவன்! தமிழா நீதான் இந்து வேதத்தின் நாயகன்! தமிழா நீதான் இந்து மதத்தின் வாழ்வு! உலக வேத வித்து நீதான்! தத்துவ வித்து நீதான்!*' என்ற உண்மையை உணர்த்த, உணர்த்த, உணர்த்த வந்திருக்கக் கூடிய தலைவன் வந்திருக்கிறோம்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

# வள்ளலார் உரை-4

## (பகுதி)

***“… …***
***சிந்தாகுலந் தவிர்த்துச் சிற்றம்பலப் பெருமான்***
***வந்தான் எனைத்தான் வலிந்தழைத்தே - ஐந்தொழிலும்***
***நீயேசெய் என்றெனக்கே நேர்ந்தளித்தான் என்னுடைய***
***தாயே அனையான் களித்து***

தமிழனே! உன் இனத்தை சேர்ந்த தமிழன் ஒருவர் பாடுகிறார், எந்த மதத்திலும் இது கிடையாது வேறு மதங்களில் இப்படிச் சொன்னால் கொன்றே விடுவார்கள், கடவுள் நேராக வந்தார் வடலூர் கருங்குழிக்கு; அப்பொழுது இராமலிங்க அடிகளார் அருட்பா எழுதிக் கொண்டிருந்தார், கடவுள் சிவபெருமான் கதவைத் தட்டினார். “இராமலிங்கம் இராமலிங்கம்” என்று அழைத்தார், இராமலிங்க அடிகளார் எழுதிக் கொண்டே, “யார் வந்திருப்பது” என்று கேட்டார்.

அதற்கு சிவபெருமான் “நான்தான் சிவபெருமான் வந்திருக்கிறேன்” என்றார். இராமலிங்க அடிகளோ “நான் இப்பொழுது அருட்பா எழுதிக் கொண்டிருக்கிறேன்; நான் முடிக்கும் வரை காத்திரு” என்று கூறினார்.

நம் இந்துமதத்தைத் தவிர வேறு எந்த ஒரு மதத்திலாவது ‘கடவுள் வந்தார்’, வந்த கடவுளை ‘நான் வேலையாக இருக்கிறேன் நீ வெளியே காத்திரு’ என்று சொல்ல முடியுமா?!!! சொல்லத் துணிவு உள்ளதா?!!! சொன்னால் … இதற்காகவே கொன்றுவிடுவர். கடவுள் மண்ணுலகுக்கு என்னைத் தேடி வந்தார் என்றாலும் கொன்றுவிடுவர், ஏனென்றால் மற்ற மதங்களின் படி கடவுள் எப்பொழுதோ ஒரு முறை வருவார். அவரையும் நாம்தான் பார்க்கப் போக வேண்டும். அதுவும் நாம் இறந்த பிறகு!

தமிழனுடைய மதத்திலே சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த என் தாத்தா பாடுகிறார், சிவனை எப்படிப் பாடுகிறார்? ‘சிந்தா குலந்தவிர்த்து’; அமுதம் உண்டு பிறப்பு, இறப்பு, நரை, பிணி, மூப்பு, சாக்காடுகளை

வென்று வாழுகின்ற சிந்தா குலத்தைச் சேர்ந்த சிற்றம்பலத்துப் பெருமான் 'அம்பலத்திலே ஆடிக் கொண்டிருக்கும் ஆடல் வல்லான்' எனைத் தேடி வந்தார், வந்து எனைத் தனித்து அழைத்தே (இராமலிங்கம் என்று பெயரிட்டு அழைத்தார்) 'ஐந்தொழிலும் நீயே செய்' என்றார்.

இப்பொழுதும் கருங்குழியிலே சிவபெருமான் ஊன்றி நின்ற கல்லும், கை ஊன்றி நின்ற வன்னி மரத்தில் ஐந்து விரல் பதிந்து இருக்கும். வரலாற்றுச் சான்றாகவே இருக்கிறது, இதைப் போன்ற நிகழ்வு வேறு மதத்தில் உண்டா!?!? இருந்தால் தமிழனுக்கு மதமே வேண்டாம் என்று சொல்லுகிறேன்,

தமிழனுடைய இந்துமதத்தில் மட்டும் தான் 'கடவுள் வந்தார், நான் அவரை காத்திருக்கச் சொன்னேன்'. இராமலிங்க அடிகள் அருட்பா எழுதி முடித்து விட்டு வந்தார். கடவுளுக்கு அவர் பெரிய மதிப்பு தரவில்லை, ஏனென்றால் தமிழர்களுடைய இந்துவேதத்தில் 'கடவுள் நமக்குத் தொண்டன்', 'கடவுள் நமக்கு தோழன்', 'கடவுள் நமக்கு நண்பர்', 'கடவுள் நமக்குத் துணைவன்', 'கடவுள் நமக்கு வழிகாட்டி' என்று கூறுகிறது. வேறு எந்த மதத்திலும் இது கிடையாது.

சமயக்குரவர் நால்வர், சந்தானக்குரவர் நால்வர் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் கடவுள் தொண்டனாக, தோழனாக, காதலிக்கும் மனைவிக்கும் தூதுவனாக வந்தார் என இருக்கிறது, இது தமிழர்களுடைய இந்துமதத்தில் மட்டும்தான் இருக்கிறது. ஏனென்றால் இது அருளை அநுபவப் பொருளாகக் கொடுக்க வல்ல மதம்.

இராமலிங்க அடிகளாரைப் பார்க்க வந்த சிவபெருமான் 'ஐந்தொழிலும் நீயே செய் என்றெனக்கே நேர்ந்தளித்தான்'. ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், இரங்கல் என்ற ஐந்தொழிலையும் நீயே செய் என்கிறார். 'என்னுடைய தாயே அணையான் களித்து'. சிவபெருமானை தன்னுடைய தாய்க்கு சமமானவராக இங்கே இராமலிங்க அடிகளார் கூறுகிறார்.

அதற்கு இராமலிங்க அடிகளார் 'தமிழகம் எனக்குப் போதும், தமிழ்மொழி எனக்குப் போதும், தமிழ் நாடு எனக்குப் போதும், தேவ நாடோ தேவ வாழ்வோ எனக்குத் தேவையில்லை' என்று சொல்லி 'நீர்

போய் வாரும்' என்று சொன்னார். இதைப் போன்ற சான்று வேறு எந்த மொழியிலும் எந்த மதத்திலும் இல்லை. நான் தமிழன் என்பதற்காக இதைச் சொல்ல வில்லை, அவ்வளவு சான்று நம்மிடம் உள்ளது.

இராமலிங்க அடிகளுக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருஞான சம்பந்தர் வரலாற்றிலே: இரண்டு ஆண்டுகளுக்கு முன் இறந்த பெண் பூம்பாவையை எரித்து சாம்பலை ஒரு குடத்தில் அள்ளி வைத்திருந்தார் மைலாப்பூரிலே ஒரு செட்டியார்; தன் வீட்டிலே வைந்திருந்தார், திருஞானசம்பந்தர் பெருமான் அந்த வீட்டிற்குச் சென்றார்,

அப்பொழுது அந்தச் செட்டியார் 'ஐயா தங்களுக்கு மணமுடிப்பதற்காக ஒரு பெண் இருந்தாள். அவள் பாம்பு கடித்து மாண்டு போனாள், அவளை எரித்து சாம்பலாக்கி இந்த குடத்தில் வைத்திருக்கிறோம்' என்றார்.

திருஞானசம்பந்தர் பெருமான் சாம்பல் இருக்கும் குடத்தைப் பார்க்கிறார். உன் தாய்மொழி தமிழ்மொழியால், செந்தமிழ் மொழியால், வண்டமிழ் மொழியால், ஒண் தீந்தமிழ் மொழியால், பைந்தமிழ் மொழியால், அழகு தமிழ்மொழியால் எளிய இனிய தமிழ்ப் பாடலைப் பாடுகிறார் திருஞானசம்பந்தர், குடத்தில் இருந்த சாம்பலில் இருந்து பெண் பாவை பூம்பாவை எழுந்து வருகிறார்.

இதை கட்டுக் கதை என்று கூறி ஒதுக்காதே. இதைப் போன்ற செய்தி வேறு எந்த மதத்திலாவது அல்லது மொழியிலாவது உண்டா? தமிழன் ஒவ்வொருவரும் தன்மானத்தோடு தலை நிமிர்ந்து 'நான் தமிழன்; என்னுடைய திருஞான சம்பந்தர் தமிழ்மொழியால்தான் குடத்திலிருந்த சாம்பலைப் பெண்ணாக மாற்றினார்' என்று சொல்ல வேண்டும். ஆனால் தமிழன் 'பகுத்தறிவு', 'சீர்திருத்தம்' என்று சொல்லிக் கொண்டு தன் மொழியின் வரலாற்றை பகுத்தறிவோடு ஆராயாமல், தன் வரலாற்றை குப்பையில் போட்டு விடுகிறார்கள், ஆனால் இதே பகுத்தறிவு, சீர்திருத்தம் பேசுபவர்கள் மற்ற மதங்களின் வரலாற்றை ஏற்றுக் கொள்கிறார்கள். ... ... ..."



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

**சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்)
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609
Printed at Kavin Printers, Madurai

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**